# பல்கலைக்கழக முஸ்லிம் மாணவிகளுக்கு மத்தியில் whatsapp பாவனையும் அதன் தாக்கங்களும்: இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய ஆய்வு

M.A. Sumaiya[1], A.H. Safiya[2] & A.R.M. Mahsoom[3]

[1,2] Department of Arabic Language, [3]Department of Arabic Language, SEUSL
masumaiya116@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய நவீன தொழில்நுட்ப சூழலில் மக்களின் வாழ்க்கை நடைமுறைகள் அனைத்தும் சமூக ஊடகங்களை சார்ந்ததாகவே அமைந்துள்ளன. குறிப்பாக whatsapp இனுடைய பாவனையை பொருத்தவரையில் வாலிபச் சமூகத்திற்கு மத்தியில் மிக முக்கியமான தொடர்பு ஊடகமாக இது காணப்படுகின்றது. அந்தவகையில் பல்கலைக்கழகத்தில் whatsapp ஆனது முஸ்லிம் மாணவிகளால் பயன்படுத்தப்படுவதை மையமாகக் கொண்டு ''பல்கலைக்கழக முஸ்லிம் மாணவிகளுக்கு மத்தியில் whatsapp பாவனையும் அதன் தாக்கங்களும்'' எனும் தலைப்பில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடத்தை மையமாகக் கொண்டதாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இது மாணவிகளுக்கு மத்தியில் whatsapp பாவனை எந்நிலையில் காணப்படுகிறது என்பதையும், பாவனை அதிகமாயின் அதற்கான காரணங்களை கண்டறிவதையும், அதனால் ஏற்படுகின்ற எதிர்மறைத் தாக்கங்களை இனங்காண்பதனையும் நோக்கங்களாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் என்பவற்றின் மூலம் முதலாம் நிலைத்தரவுகளும் ஆய்வுக்கட்டுரைகள் சஞ்சிகைகள், நூல்கள், இணையத்தளம் என்பவற்றில் இருந்து இரண்டாம் நிலைத்தரவுகளும் திரட்டப்பட்டு பண்புசார், அளவுசார் முறைகளின் ஊடாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. whatsapp ஆனது பல்கலைக்கழக மாணவிகளால் அதிக விருப்பத்துடன் பயன்படுத்தப்படுவது ஆய்வின் மூலம் அறிந்து கொள்ளப்பட்டது. அதிகரித்த whatsapp பாவனையால் சாதகமான, பாதகமான பாதிப்புக்கள் காணப்படுகின்ற போதும் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவிகளில் பாதகமான விளைவுகளே அதிகமாக இனங்காணப்பட்டன. மேலும் இவ்வாறான அதிகரித்த பாவனையால் மாணவிகள் மத்தியில் கல்வியில் மந்தகதி, ஆர்வமின்மை மற்றும் குறைந்த தேடல், whatsapp இற்கு அடிமையாதல்(addiction) போன்ற பாதிப்புகள் ஏற்படுவதை கண்டறிய முடிந்தது. அத்தோடு மாணவிகள் தமது சொந்த விடயங்களை whatsapp status இல் பதிவேற்றுவதன் மூலம் தமக்கு தெரிந்த, தெரியாத அனைவருக்கும் அவர்களுடைய வாழ்வு படம்பிடித்து காட்டப்படுவது இவ்வாய்வின் மூலம் அறியப்பட்டது. அந்த அடிப்படையில் இம்முஸ்லிம் மாணவிகளுக்கு மத்தியில் whatsapp பாவனை அதிகரித்து காணப்படுவதும், இதனால் பாதகமான பாதிப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றன என்ற முடிவுக்கு வரலாம். இவ் அதிகரித்த whatsapp பாவனையை குறைப்பதற்கும் நெறிப்படுத்துவதற்கும் வீணாக whatsapp ஐ பயன்படுத்துவதை தவிர்த்து நேரத்தை திட்டமிட்டு பயன்தரும் முறையில் பயன்படுத்தல், whatsapp ஊடாக தனித்துவத்தை நிலைநாட்டுவதை விடுத்து கல்வி முன்னேற்றத்தில் தமது தனித்துவத்தை நிலைநாட்ட விளைதல், விரிவுரை நேரங்களில் இலவச wifi யின் ஊடாக whatsapp ஐ உபயோகிக்க முடியாமல் நிறுத்தி வைத்தல் போன்ற பரிந்துரைகளை இவ்வாய்வு முன்வைக்கின்றது.

**திறவுச் சொற்கள்:** முஸ்லிம் மாணவிகள;, whatsapp பாவனை, தாக்கங்கள

## ஆய்வின் அறிமுகம்

தொழிநுட்ப மயமான இன்றைய உலகில் தொடர்பாடல் என்பது அன்றைய காலங்களைப் போல் அல்லாது மிக இலகுவானதொன்றாக மாறிவிட்டது. மனிதன் ஒரு சமூகப் பிராணி என்ற அடிப்படையில் அவன் தனிமையை விட ஏனைய மக்களோடு தொடர்பாடலைப் பேணி வாழவே விரும்புகின்றான். அந்த அடிப்படையில் காலத்திற்கு காலம், மனிதன் புதுப்புது தொடர்பாடல் முறைகளை கண்டுபிடிக்கின்றான். இணையக் கண்டுபிடிப்பை தொடர்ந்தே தொடர்பாடலை விரைவுபடுத்துவதற்கான சமூக ஊடகங்கள் பாவனைக்கு வந்தன. இன்றைய உலகில் சிறுவர்கள், பெரியோர்கள், முதியோர்கள் என்ற எந்த வேறுபாடுமின்றி அனைவரும் இந்த சமூக ஊடகங்களை பயன்படுத்துகிறார்கள்.

இன்றைய பாவனையில் இருக்கும் மிகப் பிரபல்யமான சமூக ஊடகங்களாக Facebook, Line, Whatsapp, IMO, Viber, Instagram, LinkedIn,Twitter போன்றன காணப்படுகின்றன. என்றாலும் ஆசிய நாடுகளில் மிக அதிகமானவர்களால் பாவிக்கப்படுகின்ற ஐந்து சமூக ஊடகங்களின் வரிசையில் Whatsapp மூன்றாவது இடத்தில் காணப்படுகின்றது.(ADSOUP, para.3) ,J Brian Acton மற்றும் Jan Koum என்பவர்களால் 2009 ஆண்டு உருவாக்கப்பட்டது.

குறித்த கட்டணங்கள் எதுவுமின்றி இணைய இணைப்பின் ஊடாக தகவல்களை விரைவாகவும் இலகுவாகவும் பரிமாறுவதற்கே ஆரம்பத்தில் இந்த தகவல் பரிமாற்று ஊடகம் பயன்படுத்தப்பட்டது. ஆனால் இன்று இதில் நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் குறுந்தகவல்கள் மாத்திரமின்றி புகைப்படங்கள், காணொளிகள் மற்றும் காணொளி அழைப்புக்களையும் ஏற்படுத்த முடியும்.

சமூக ஊடகங்களை அதிகமாக பயன்படுத்துவது இளைஞர்கள்தான் என ஆய்வுகளின் மூலம் அறிய முடிகின்றது. அந்தடிப்படையில் குறைந்த செலவில் பாவிக்கக் கூடியது என்பதாலும் ஒன்றுக்கு மேற்பட்டோருக்கு ஒரே நேரத்தில் இலகுவாக தொடர்பை ஏற்படுத்த முடியும் என்பதனாலும் whatsapp இன் உபயோகம் பல்கலைக்கழக மாணவர்களிடத்தில் குறிப்பிடத்தக்களவு காணப்படுகின்றது.

இலங்கையிலுள்ள பதினைந்து பல்கலைக்கழங்களில் முஸ்லிம் மாணவர்களை பெரும்பான்மையாக கொண்ட ஒரே பல்கலைக்கழகமாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் திகழ்கின்றது. குறிப்பாக அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகளுக்கென்று தனித்துவமாக திகழ்கின்ற இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிக்கான பீடத்தில் முஸ்லிம் மாணவிகளே அதிகமாக உள்வாங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த அடிப்படையில் இப் பீடத்தை சேர்ந்த விடுதியில் தங்கி கற்கும் முஸ்லிம் மாணவிகளின் அன்றாட வாழ்வின் முக்கிய அம்சமாக whatsapp மாறியுள்ளதாக அவதானிப்புக்களின் மூலம் அறியக் கிடைத்தது. ஆகவே மித மிஞ்சிய சமூக வலையத்தள பாவனை, கல்வியை தொடரும் ஒரு மாணவனுக்கு உகந்தது அல்ல என்ற அடிப்படையிலும் இவ்வாறான whatsapp பாவனையின் மூலம் முஸ்லிம் மாணவிகளின் கல்வி வாழ்கை பாதிக்கப்படக் கூடாது என்ற பின்னனியிலும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

- முஸ்லிம் மாணவிகளுக்கு மத்தியில் whatsapp பாவனையின் அண்மைக்காலப் போக்கை கணிப்பிடுதல்.
- அதிகரித்த whatsapp பாவனைக்கான காரணங்களை கண்டறிதல்.
- அதிகரித்த whatsapp பாவனையால் ஏற்படும் எதிர்மறை பாதிப்புக்களை இனங்காணல்.

**ஆய்வுப் பிரச்சினை**

இலங்கையில் உள்ள அரச பல்கலைகழகங்களில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகமும் ஒன்றாகும். இங்கு இலங்கையின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த மாணவ மாணவியர் விடுதியில் தங்கி தமது கல்வியை தொடர்கின்றனர். இதில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடம் 1300க்கும் அதிகமான மாணவர்களைக் கொண்டு காணப்படுகின்றது. இங்கு கல்வி கற்கின்ற முஸ்லிம் மாணவர்களில் 75% மானோர் மாணவிகளாவர். இப்பீடத்தில் இலவச wifi உட்பட அனைத்து தொழிநுட்ப வசதிகளும் காணப்படுவதோடு மாணவ மாணவிகள் நவீன சமூக வலைத்தளங்களை பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகின்றனர். இலகுவானதும் விரைவானதுமான தொடர்பாடல் என்பதனால் இப் பீடத்தை சேர்ந்த முஸ்லிம் மாணவிகள் whatsapp பாவனையில் அக்கறை செலுத்துவதை அவதானிக்க முடிந்தது. அதிலும் குறிப்பாக விடுதியில் தங்கி கற்கின்ற இப்பீடத்தை சேர்ந்த மாணவிகள் whatsapp இல் அதிக ஈடுபாடு காட்டுவதோடு கல்வி விடயங்களில் போதியளவு அக்கறை காட்டாமையும் அவதானிக்கப்பட்டது. இது இப்பீட முஸ்லிம் மாணவிகளின் வாழ்வை பாதிப்பதோடு இப்பீடத்திற்கும் பாரிய கல்வி வீழ்ச்சியை ஏற்படுத்தக் கூடியதாகும். அந்தவகையில் இப்பீட முஸ்லிம் மாணவிகளுக்கு மத்தியில் whatsapp பாவனையின்

அண்மைக்காலப் போக்கையும் அதனால் ஏற்படுகின்ற விளைவுகளையும் மையப்படுத்தியதாக எமது ஆய்வுப் பிரச்சனை காணப்படுகின்றது.

**ஆய்வு எல்லை**

தலைப்பு எல்லை : whatsapp பாவனையும் அதன் தாக்கங்களும்
பிரதேச எல்லை : இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீட விடுதி
ஆள் எல்லை : பல்கலைக்கழக இரண்டாம் வருட முஸ்லிம் மாணவிகள்

**இலக்கிய மீளாய்வு**

whatsapp பாவனை மற்றும் அதனால் ஏற்படுகின்ற தாக்கங்கள் அதற்கான காரணங்கள் whatsapp addiction போன்றவை தொடர்பாக பல்வேறு பட்ட சமூக உளவியல் ஆய்வுகள் மற்றும் கட்டுரைகள் என்பன உலகெங்கும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Journal of Education and practice என்ற ஆய்வு சஞ்சிகையில் Johnson Yeboah, George Dominic ஆகியோரால் எழுதப்பட்ட " The Impact of Whatsapp Messenger Usage on Students Performance in Tertiary Institutions in Ghana": எனும் ஆய்வில் whatsapp பாவனையால் மாணவர்கள் நன்மையை விட அதிகமாக தீமையையே அடைவதாக விளக்கப்பட்டிருக்கிறது.

Shobuj Bangladesh Publication House ஆல் வெளியிடப்பட்ட International Journal of Natural and Science என்ற ஆய்வு சஞ்சிகையில் Md.Golam Rabbani Sarker என்பவரால் ஆய்வு செய்யப்பட்ட "Impact of Whatsapp Messenger on the University Level Student : A Sociological Study" என்ற ஆய்வுக் கட்டுரையில் whatsapp பாவனையால் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படவதோடு அவர்கள் தமது சொந்த வாழ்வை முன்னேற்றுவதை விட whatsapp ஐ பயன்படுத்துவதிலேயே அதிக கரிசனை காட்டுவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடத்தின் 4வது சர்வதேச ஆய்வு மாநாட்டில் MB.Muneera, MI.Fowzul Ameer ஆகியோரல் வெளியிடப்பட்ட "Impact of Social Media on Muslim Society; The Research Overview of Kalmunai Municipal Council Area" என்ற ஆய்வில் சமூக வலைத்தளப் பாவனை கல்முனை முஸ்லிம் மக்களிடையே அதிகரித்து காணப்படுவதனால் ஏற்படுகின்ற சமூக பாதிப்புக்கள் பற்றி தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

இவ்வாறு சமூக ஊடகங்கள், அதிலும் குறிப்பாக whatsapp தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் காணப்படுகின்ற போதும் "பல்கலைக்கழக முஸ்லிம் மாணவிகளுக்கு மத்தியில் whatsapp பாவனையும் அதன் தாக்கங்களும்: இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீட இரண்டாம் வருட விடுதி மாணவிகளை மையப்படுத்திய ஆய்வு" எனும் குறித்த தலைப்பில் இதுவரை எந்தவொரு ஆய்வும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது பண்புசார் மற்றும் அளவுசார் முறைகள் சார்ந்ததாக காணப்படுகின்றது. தகவல் சேகரிப்பிற்காக முதலாம் நிலைத்தரவுகளாக வினாக்கொத்துக்கள், நேர்காணல், அவதானிப்பு, கட்டமைக்கப்படாத உரையாடல் என்பன பயன்படுத்தப்பட்டன. இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடத்தில் இரண்டாம் வருட விடுதி மாணவிகளில் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட 50 மாணவிகளுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் விநியோகிக்கப்பட்டன. இவ் 50 மாணவிகளில் 10 மாணவிகள் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டனர். சேகரிக்கப்பட்ட தரவுகள் MS Exel மூலம்

பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. மேலும் விடுதியில் வசிக்கும் மாணவிகள் பொதுவாக அவதானிக்கப்பட்டனர்.

இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், நூல்கள், இணையத்தளம் என்பவற்றில் இருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டன.


**கலந்துரையாடலும் பரிந்துரைகளும்**

இன்றைய காலகட்டத்தில் இளைஞர் யுவதிகளை சமூக வலைத்தளங்கள் ஆட்டிப்படைப்பது அனைவரும் அறிந்ததாகும். அந்த அடிப்படையில் முஸ்லிம் இளைஞர் யுவதிகளிடமும் அதனுடைய தாக்கம் அதிகரித்துக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். தற்காலத்தில் பல்வேறு சமூக ஊடகங்கள் காணப்பட்ட போதும் பல்கலைக்கழக மாணவச் சமூகத்திற்கு மத்தியில் whatsapp மிக முக்கிய தொடர்பாடல் ஊடகமாக திகழ்கின்றது.

இவ்வடிப்படையில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடத்தின் இரண்டாம் வருடத்தில் கற்கும் 50 மாணவிகளிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக இரண்டாம் வருட மாணவிகளில் தூரப்பிரதேசங்களில் இருந்து வந்து விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவிகளைக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு மாதிரிக்காக எடுக்கப்பட்ட 50 மாணவிகளில் 10 பேர் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டும், மாணவிகளிடமிருந்து பெறப்பட்ட பொதுவான அவதானிப்பு, கட்டமைக்கப்படாத உரையாடல் என்பவற்றின் மூலம் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

- முஸ்லிம் மாணவிகளுக்கு மத்தியில் whatsapp பாவனையின் அண்மைக்காலப் போக்கை கணிப்பிடுதல்.

இந்த அடிப்படையில் எமது ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட 50 மாணவிகளில் அனைவரும் whatsapp ஐ தமது கைத்தொலைபேசிகளில் வைத்திருப்பது அறியப்பட்டது. மேலும் அம்மாணவிகளில் 64% ஆனோர் whatsapp பாவனையில் அதீத விருப்பத்தை கொண்டிருப்பது கண்டறியப்பட்டது. இதை வரைபடம் 1 தெளிவுபடுத்துகிறது. இந்த அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அனைத்து மாணவிகளும் whatsapp பாவனையில் பொதுவான விருப்பமொன்றை கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.





*வரைபு 1*

மேலும் மாதிரியாக எடுக்கப்பட்ட மாணவிகளில் பெரும்பாலானோர் ஒரு நாளில் இரண்டு தடவைகளுக்கு அதிகமாக whatsapp ஐ உபயோகிப்பதும் அதிலும் குறிப்பாக 36% மான மாணவிகள் உண்ணுதல், கற்றல் போன்ற அன்றாட நடவடிக்கைகளின் இடைக்கிடையே, whatsapp குறுந்தகவல்கள் வந்தடைந்த ஒலி கேட்கும் நேரம் அல்லது அதனுடைய சமிஞ்சையை காணும் போதெல்லாம் அடிக்கடி whatsapp ஐ பார்வையிடுகின்றனர். இந்த


அடிப்படையில் இம் மாணவிகளிடம் whatsapp பாவனை அசாதாரண அதிகரிப்பிற்கு உள்ளாகிருப்பதை அறியக்கிடைத்தது.

தொடர்ந்து ஆய்வினை மேற்கொள்ளும் போது இம் மாணவிகள் வரையறைகள் கொண்ட குடும்பச் சூழலை விட்டு தன்னுடைய செயற்பாடுகளை மிகச் சுதந்திரமாக நிறைவேற்றக் கூடிய விடுதிச் சூழலுக்குள் உள்வாங்கப்படுகிறார்கள். ஆதலால் எமது ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட மாணவிகளில் 82% மானோர் வீட்டுச் சூழலை விட பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருக்கும் போதே whatsapp ஐ அதிகமாக உபயோகிக்கின்றமையை வரைபு 2 எடுத்துக் காட்டுகின்றது.




*வரைபு 2*

மேலும் வினாக்கொத்துக்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி, இம் மாணவிகளில் அதிகமானோர் கூடுதலான நேரத்தினை whatsapp யிலேயே கழிக்கின்றனர். அவர்களில் 38% மானோர் ஒரு நாளில் 5-7 மணித்தியாலங்களையும் 42% மானோர் 2-4 மணித்தியாலங்களையும் whatsapp இல் கழிக்கின்றனர். மேலும் 20% மாணவிகள் 1-2 மணித்தியாலங்கள் வரை whatsapp ஐ உபயோகிக்கின்றனர். பார்க்க வரைபு 3. இதன்படி 80% ஆனோர் ஒரு நாளைக்கு 2 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட நேரம் whatsapp ஐ உபயோகிக்கின்றனர்.





*வரைபு 3*

மேற்கூறப்பட்ட கண்டறிதல்களின் அடிப்படையில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடத்தைச் சேர்ந்த இரண்டாம் தர விடுதி மாணவிகளின் whatsapp பாவனையானது அசாதாரண வளர்ச்சிப் போக்கை கொண்டிருப்பது கண்டறியப்பட்டது.

- அதிகரித்த whatsapp பாவனைக்கான காரணங்களை கண்டறிதல்.

எமது ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவிகளில் அதிகமானோர் வீட்டுச் சூழலை விட பல்கலைக்கழக விடுதியில் இருக்கும் போதே whatsapp ஐ அதிகமாக உபயோகிக்கின்றார்கள். இதற்கு பிரதான காரணம் விரிவுரை நேரம் தவிர்ந்த நேரங்களில் பெரிய வேலைப்பளுக்கள் எதுவுமின்றி அதிகமாக விடுதிகளில் ஓய்வாக இருப்பதோடு குடும்பத்தை விட்டு தூர இருப்பதால் குடும்ப அங்கத்தவர்களுடன் உரையாட வேண்டியிருப்பதுமே ஆகும் என நேர்காணல்களின் ஊடாக அறியக்கிடைத்தது.

மாதிரியாக எடுக்கப்பட்ட மாணவிகள் எதற்காக whatsapp ஐ அதிகம் பயன்படுத்துகிறார்கள் என்று ஆய்வு செய்ததன் அடிப்படையில் 64% ஆன மாணவிகள் நண்பர்களோடு அரட்டையடிக்கவே whatsapp ஐ உபயோகிக்கின்றனர். மேலும் 16% மானோர் உறவினர்களோடு தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக பயன்படுத்துவதோடு 20% மாணவிகளே கல்வி நடவடிக்கைகளுக்காக whatsapp ஐ பயன்படுத்துகின்றனர்.பார்க்க வரைபு 4.




*வரைபு 4*

இந்த அடிப்படையில் இம் மாணவிகளில் அதிகமானோர் தமது நண்பர் வட்டத்தை அதிகரித்துக் கொள்ளவும் நண்பர் குழாமினுடைய தொடர்பை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளவும் whatsapp இல் அதிக நேரத்தினை கழிக்கின்றனர். அதாவது அதிகரித்த whatsapp பாவனையின் பிரதான பின்னணி பொழுது போக்கான பயனற்ற அரட்டையடித்தலே ஆகும்.

மேலும் செலவு குறைவாக இருப்பதனாலும், ஒரே நேரத்தில் பலருக்கு ஒரு தகவலை பார்க்கக் கூடியவாறு குழுமங்கள் காணப்படுவதனாலும் தகவலை அவர் பெற்றுக் கொண்டதை தமக்கு அறியக்கூடிய வசதிகள் காணப்படுவதனாலும் மாணவிகளில் பெரும்பாலானோர் பல்கலைக்கழக வளாகத்தின் உள்ளேயும் ஒருவரோடு உடனடியாக தொடர்புகொள்ள வேண்டி ஏற்படும் போது அடிப்படை தொலைபேசி

அழைப்புக்களை(normal phone call) ஏற்படுத்துவதனை விடுத்து whatsapp ஐயே பயன்படுத்துகின்றனர்.

- அதிகரித்த whatsapp பாவனையால் ஏற்படும் எதிர்மறை பாதிப்புக்களை இனங்காணல்.

இந்த whatsapp பாவனையால் மாணவிகளிடம் சாதகமான ஒருசில நன்மைகள் ஏற்பட்ட போதும், கல்வி நோக்கத்திற்காக குடும்பச் சூழலை விடுத்து விடுதிகளில் தங்கியிருக்கும் முஸ்லிம் மாணவிகள் தமது நோக்கத்தை மறந்து போகுமளவு பாதகமான விளைவுகளே அதிகமாக ஏற்படுவது இவ்வாய்வு மூலம் தெளிவாக்கப்பட்டது.

<u>உளரீதியான தாக்கங்கள்</u>

எமது ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட மாணவிகளில் சிலர் உண்ணுதல், கற்றல் போன்ற அன்றாட நிகழ்வுகளின் போது whatsapp பார்வையிடுவது இம்மாணவிகளை உளப்பதற்ற நிலைக்கு ஆளாகின்றனர். அதாவது இவர்களுக்கு எந்தவொரு விடயத்திலும் முழுமையாக கவனத்தை செலுத்தி மன ஓர்மையுடன் இருப்பது கடினமாக இருக்கின்றது.


பொதுவாக whatsapp application இல் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்ற விடயங்கள் வாலிப சமூகத்தை அதிகம் கவரக் கூடியதும் நீண்ட நேரம் சலிப்பில்லாமல் அதனை பயன்படுத்தக்கூடியதாகவே வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. அதில் மிக முக்கியமாக whatsapp Profile,Status என்பவற்றின் வடிவமைப்பு இளைஞர் யுவதிகளுக்கு சமூக தனித்துவத்தை பெற்றுக்கொடுப்பதாகவே அவர்கள் எண்ணுகின்றனர். ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட மாணவிகள் whatsapp Profile, Status என்பவற்றில் தங்களுக்கு விருப்பமான விடயங்களை பதிவேற்றுவதன் மூலம் தங்களுடைய தனித்துவத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகின்றனர். அதில் 40% மானோர் ஒரு நாளில் அடிக்கடி தமக்கு பிடித்தமான நிகழ்வுகளை whatsapp status இல் பதிவேற்றுவதோடு 36% மானோர் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப whatsapp status இனை பதிவேற்றுகின்றனர். தாம் கலந்து கொண்ட நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட தங்களுடைய, தமக்குப் பிடித்தவர்கள், நண்பர்குழாம், குடும்ப உறுப்பினர்கள் என்போரின் புகைப்படங்களை அல்லது தமக்கு பிடித்த தத்துவ வரிகள், சினிமா பாடல்கள், இஸ்லாமிய பாடல்கள் என்றவாறு தமது தனித்துவத்தை வெளிப்படுத்துவதற்காக பதிவேற்றுகின்றனர். இவ்வாறு இம் மாணவிகள் தங்களுடைய உளவியல் சார் உணர்வுகளை whatsapp Profile மற்றும் Status இன் ஊடாக வெளிப்படுத்துவது கண்டறியப்பட்டது. அதாவது ஏனையோருடன் தமக்கிருக்கின்ற அன்பு, கரிசனை, நன்றியுணர்வு மற்றும் மனக்கசப்புக்கள், கோபங்கள் என்பவற்றை நேரடியாக அவர்களுக்கு தெரிவிப்பதை தவிர்த்து whatsapp Status களில் பதிவேற்றுவதன் மூலமே குறித்த நபருக்கு அறியப்படுத்துகின்றனர். அதேபோல் whatsapp இல் குறித்த நபரை தடை (block) செய்வதினூடாகவும் அவருடைய குறுந்தகவலுக்கு பதிலளிக்காமல் இருப்பதன் ஊடாகவும் தம்முடைய கோபஉணர்வுகளை பரிமாறுகின்றனர். இது உள ஆரோக்கியத்திற்கு உகந்தது அல்ல. இவ்வாறான நடவடிக்கைகள் மனவெழுச்சி சார் சமநிலையின்மையை தோற்றுவிக்கின்றது.

மேலும் ஒரு நாள் பூராக whatsapp பாவிக்க முடியாத நிலைமை ஏற்படும் போது ஒரு சில மாணவிகளுக்கு தனிமை உணர்வு ஏற்படுவதாகவும் இன்னும் சிலருக்கு அதிக கவலை ஏற்படுவதாகவும் மேலும் பலருக்கு வாழ்வில் ஒரு வகை சலிப்பு ஏற்படுவதாகவும் தெரிவித்தனர். அதாவது அவர்களை அறியாமலேயே அவர்கள் உள நெருக்கடிக்கு உள்ளாகுவதோடு அவர்களின் சந்தோசம், கவலை, தனிமை, வாழ்வில் விரக்தி போன்ற உளவியல் சார் மனவெழுச்சிகள் whatsapp மூலம் நிர்ணயிக்கப்படுவது தெளிவாகின்றது. இதனால் சில மாணவிகள் தம்மையறியாமலே whatsapp addiction இன் ஆரம்ப கட்டங்களில் உள்ளனர்.

<u>கல்விரீதியான தாக்கங்கள்</u>

எமது ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவிகளில் 80% ஆனோர் ஒரு நாளைக்கு 2 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட நேரம் whatsapp இனை பயன்படுத்துவதனால் சோம்பல் தன்மை ஏற்படுவதோடு இரவு நேர சுயகற்றலுக்கு தடையாக அமைவதாக இவ்வாய்வின் மூலம் அறியப்பட்டது.

விடுதியிலிருக்கும் போது அதிகமாக whatsapp ஐ பயன்படுத்தி பழகிய மாணவிகள் விரிவுரை நேரங்களிலும் அதனை பயன்படுத்த முற்படுகின்றனர் என்பதை வரைபு 5 தெளிவுபடுத்துகிறது. 36% மாணவிகள் விரிவுரை நேரங்களில முழுமையாக whatsapp ஐ உபயோகிக்கின்றனர். 52% மானோர் இடைக்கிடையே பயன்படுத்துகின்றனர்.




*வரைபு 5*

whatsapp தவிர்த்து இருக்க முடியாத மாணவிகள் விரிவுரைகளில் சலிப்படைவதோடு அதற்கு பகரமாக whatsapp ஐ பயன்படுத்துகின்றனர். இதனால் பாடங்களில் அவர்கள் கவனம் செலுத்தாது விடுவதும் பரீட்சையில் திண்டாடுவதும் ஆய்வின் மூலம் தெரியவந்தது. இம் மாணவிகளில் 60% மானோர் 21-30 வரையான whatsapp குழுமங்களில் அங்கத்துவம் வகிக்கின்றார்கள். இதில் அதிகமானவை கல்வி நடவடிக்கைகள் சார்ந்தவைகளுக்காக உருவாக்கப்பட்ட போதிலும் காலப்போக்கில் அவை ஆண் பெண் என்ற எந்த வேறுபாடுமின்றி வீணாக அரட்டை அடிக்கின்ற குழுமங்களாக மாறிவிடுகின்றன. இதில் சினிமா விடயங்களை பகிர்ந்து கொள்வதற்கும் நண்பர்களோடு தொடர்பு கொள்வதற்கும் என்று தனியாக உருவாக்கப்பட்ட குழுமங்களும் காணப்படுகின்றன. பரீட்சை நெருங்கிய காலங்களில் குழுமங்களில் பாடங்களோடு சம்பந்தப்பட்ட குறிப்புக்கள், புத்தகங்கள் என்பன பகிரப்படுகின்றன. இது உடனடி நன்மை போன்று தோன்றினாலும் இதனூடாக மாணவிகளின் சுயதேடல், கற்றல் ஆர்வம் இல்லாமல் போவதோடு ஆளுமை விருத்தி குறைவதும் அறியப்பட்டது.

**முடிவுரை**

ஆய்வுப் பிரதேசமான இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீட இரண்டாம் வருட மாணவிகளை மையமாகக் கொண்ட இவ்வாய்வின் மூலம் இவ்விடுதி மாணவிகளில் அதிகமானோர் whatsapp பாவனையை விரும்புவது எடுத்துக்காட்டப்பட்டது. அண்மைக்காலமாக இவ்விடுதி மாணவிகளில் ஏற்பட்டுள்ள அதிகரித்த whatsapp பாவனையால் எதிர்மறையான விளைவுகளே அதிகமாக இருக்கின்றன என்பதும் கண்டறியப்பட்டது. இது ஆரோக்கியமான நிலை அல்ல. மேலும் இம்மாணவிகளில் அதிகமானோர் ஒரு நாளில் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட நேரத்தை whatsapp இல் கழிப்பதையும் அதிலும் அதிகமான நேரத்தில் வீணான அரட்டைகளிலே ஈடுபடுவதையும் அவதானிக்க முடிந்தது. ஆகவே இம் முஸ்லிம் மாணவிகள் whatsapp ஐ வரையறைகளோடு பயன்படுத்தவும் கல்வி சார் நடவடிக்கைகளுக்கான சிறந்ததொரு ஊடமாக இதனை உபயோகிக்கவும் வேண்டும்.

**பரிந்துரைகள்**

பல்கலைக்கழக முஸ்லிம் மாணவிகளிடத்தில் அதிகரித்து காணப்படும் whatsapp பாவனையை கட்டுப்படுத்துவதோடு சாதகமான முறையில் அதனை பயன்படுத்த வேண்டும் என்பதே எமது ஆய்வின் நோக்கமாகும். அவ்வகையில் கீழ் வருகின்ற பரிந்துரைகள் மூலம் எமது நோக்கத்தை அடைந்து கொள்ளலாம்.

- நேரத்தை போக்குவதற்காக எந்த நோக்கமும் இன்றி whatsapp ஐ பயன்படுத்துவதை விடுத்து நேரத்தை திட்டமிட்டு பயன்தரும் முறையில் பயன்படுத்துதல்.
- மாணவிகள் whatsapp யின் ஊடாக தன்னுடைய தனித்துவத்தை நிலைநாட்ட முனைவதை விடுத்து கற்றல் நடவடிக்கையில் முன்னேற்றுவதில் தனித்துவத்தை நிலைநாட்ட விழைதல்.
- விரிவுரையினுள் கையடக்கத்தொலைபேசியை தடை செய்தல். அல்லது இலவச wifi யில் whatsapp பாவிக்க முடியாமல் நிறுத்தி வைத்தல்.
- மாணவிகளுக்கு பாடங்களோடு தொடர்புபட்ட அதிகமான வீட்டு வேலைகள், ஆய்வுகள், நிகழ்துகைகள் என்பவற்றை கட்டாயப்படுத்தி வழங்குவதன் மூலம் விரிவுரை தவிர்ந்த ஏனைய நேரங்களில் மாணவிகள் பாடம் சார்ந்த வேலைப்பளுவோடு காணப்படுவர்.

**உசாத்துணைகள்**


கோகிலன்,ஏ.கே. (2003). தகவல் தொழில்நுட்பம். சிவகோவகி வெளியீட்டகம்: திருகோணமலை.

மீனாட்சி. (2018). வாட்ஸ்ஆப் சிந்திக்கிறது. தமிழ் கம்பியூட்டர், ஜெ.எ பிராசசிங், 29 வி. என் தாஸ் தெரு, பார்டர் தோட்டம், சென்னை.

Muneera, MB, Ameer Fowzul, MI. (2017). Impact of Social Media on Muslim Society:The Research Overview of Kalmunai Municipal council Area, Proceedings Fourth International Symposium, 2017. Faculty of Islamic Studies and Arabic Language , South Eastern University of Sri Lanka , Oluvil. (P9-19)

Nuskiya Fathima, Aliyar, (2017). The Impact of Social Media among the University Students Empirical Study Based on the South Eastern University of Sri Lanka. *Journal of Information Systems & Information Technology* (*JISIT*), (Vol. 2 No. 1).

Shameera, AWF, Nadheera, AKF. (2017). பாடசாலை மாணவர்களும் அதிகரித்த கைத்தொலைபேசி பாவனையும் அதன் தாக்கங்களும்: அல் முர்சித் மகா வித்தியாலயத்தின் 8-13 ஆம் தர மாணவர்களை மையமாகக் கொண்ட ஆய்வு, Proceedings Fourth International Symposium ,2017. Faculty of Islamic Studies and Arabic Language , South Eastern University of Sri Lanka , Oluvil. (P1-8)

Sarker, MGR. (2015). Impact of Whatsapp Messenger on the University Level Student: A Sociological Study, *International Journal of Natural and Science,* 2(4),118-125.

Yeboah Johnson,Dominic George.(2014). The Impact of Whatsapp Messenger Usage on Students Performance in Tertiary Institutions in Gana. *Journal of Education and Practice*, 5(6), 157-164.

Top 5 Popular Social Media Sites in Asia. Retrieved form *http://adsoup.com/top-5-popular-social-media-sites-in-asia/*